1995 நவம்பர் 8]

செய்யக்கூடிய குறுவை நெல் அனைத்தும் நேரடியாக கொள்முதல் நிலையம் மூலமாக கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகள் நெல்லை விற்பதற்கு முடியாத ஒரு சூழ்நிலையில் இன்றையதினத்தில் அவர்கள் தனி வியாபாரிகளைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அனுமதி இல்லாதவர்கள், லைசன்ஸ் பெறாதவர்கள் நெல்லைக் கொள்முதல் செய்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆக, அரசாங்கமே நெல்லைக் கொள்முதல் செய்ய முன்வருமா, இன்றைக்கே அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.35

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தாங்களாகவே அரசுக்கு நெல் தருவதற்கு முன்வருவார்களேயானால் நாங்கள் கொள்முதல் செய்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஆனால் இரட்டைக் கொள்முதல் இருக்கிற காரணத்தினால் நாங்கள் யாருமே வற்புறுத்த இயலாது. விவசாயிகளுடைய நலனில் அக்கறை கொண்டு இருக்கிற புரட்சித் தலைவி, விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு, தூய எண்ணத்தோடு, ஏழைகளை வாழ வைக்க வேண்டும் என்ற பரந்த உள்ளத்தோடு, சாதாரண ஏழை விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தத் திட்டத்தை அனைவருடைய ஆலோசனைக்கு இணங்க, அனைத்து ஏழை விவசாயிகளுடைய நலனுக்காகக் கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளாகவே முன்வந்து தர முன்வருவார்களேயானால் நாங்கள் கொள்முதல் செய்வதற்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

48—

அருமனை ஆற்றூர் சாலையில் பாலம் கட்டுதல்

**11811–திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 8*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, அருமனை ஆற்றூர் சாலையில் பனங்கரை என்ற இடத்திலுள்ள பாலம் இடிந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த இடத்தில் புதிய பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது திட்டம் ஏதும் இல்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பனங்கரை பாலமானது ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அந்தப் பாலம் உடைந்து 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டது. அங்கே பல ஆபத்துக்கள் நடந்திருக்கின்றன. இந்தப் பாலம் உடைந்ததன் காரணமாக உண்மையிலேயே அங்கு போக்குவரத்திற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையால் கருணைகூர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலித்து இந்த ஆண்டு அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அருமனை ஆற்றின் குறுக்கே அந்த வாய்க்காலில் கட்டப்பட்ட பாலத்திற்கு 12 இலட்சம் ரூபாய்க்கு மேலே மதிப்பீடு தயாரித்திருக்கிறார்கள். அந்தப் பாலத்திலே இப்போது போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பழைய காலத்திலே கட்டப்பட்ட பாலம்தான். நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, எல்லா பாலங்களையும் ஓராண்டிலே கட்ட முடியாது என்பதைப் பலமுறை நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். முன்னுரிமை அடிப்படையிலே, போக்குவரத்து நெரிசல்களின் அடிப்படையிலேதான் எந்தெந்தப் பகுதியிலே முன்னுரிமை கொடுத்து எடுக்க வேண்டுமோ, அந்தப் பகுதியிலே முன்னுரிமை கொடுத்து, பழுதுபட்ட பாலங்களைச் சீரமைத்துக் கொண்டு இருக்கிறோம். அந்த அடிப்படையிலே இது முன்னுரிமைப் பட்டியலிலே வரவில்லை என்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு இணங்க அது சம்பந்தமாக, துறை அதிகாரிகளோடு

1995 நவம்பர் 8]

கலந்து ஆலோசித்து தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னதற்கு நன்றி. உண்மையிலேயே 12 இலட்சம் ரூபாய் அதற்குத் தேவைப்படாது. அது சிறிய ஒரு பாலம்தான். ஆனால் நிறைய வாகன போக்குவரத்து உள்ளது. 2,3 தடவைகள் அங்கு ஆபத்து நடந்துள்ளது. ஆகவே கருணைகூர்ந்து 7, 8 லட்சம் ரூபாயில் குறைந்த அளவிலே செலவு செய்து அந்தப் பாலத்தைக் கட்டலாம். அப்படி ஒரு குறைந்த அளவிலே செலவு செய்தாவது இந்த வருடமே அந்தப் பாலத்தைக் கட்டி அங்குள்ள ஊர் மக்களுக்கு உதவுமாறு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் கட்டுகின்றபோது குறைந்த செலவு, நிறைந்த செலவு என்று பார்க்க முடியாது. அதிலே "ஸ்டெபிலிட்டி" என்று சொல்லப்படுகிற ஸ்திரத்தன்மையைப் பார்த்துதான் பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். அப்போதுதான் நீண்ட காலங்களுக்கு அந்தப் பாலங்கள் உறுதியான முறையிலே வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு அமையும். இந்தப் பாலத்தைப் பொறுத்தமட்டிலே ஏறத்தாழ 6.7 மீட்டர் அளவிலே, ஏற்கெனவே கான்கிரீட் தளம் போட்ட பழைய பாலம். இதைப் புதிய பாலமாக மாற்ற வேண்டும் என்று சொன்னால் அதற்குரிய மதிப்பீடுகள் அந்த ஷெட்யூல் ஆஃப் ரேட் என்று சொல்லப்படுகிற அந்தந்த ஆண்டு ரேட்படிதான் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. ஆகவே, கட்டுகின்ற பாலம் வலுவுள்ளதாக இருக்க வேண்டும். குறைந்த செலவிலே பாலம் கட்டி, அது இடிந்து போய்விட்டால் அரசின்மீது குற்றச்சாட்டுக்கள் வரும். ஆகவே டெக்னிகல் அட்வைஸ்படிதான் பாலங்கள் கட்டப்பட வேண்டும். அதற்குரிய துறையினிடத்திலே கலந்து பேசி, அந்த மதிப்பீட்டின்படிதான் அரசு முடிவு எடுக்கும். இதிலே 8 லட்சமா 12 லட்சமா என்பது அல்ல. அது முன்னுரிமை அடிப்படையிலே உடனே கட்டப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் பிரச்சினை. ஆகவே, அது சம்பந்தமாக என்ன உரிய மதிப்பீடோ அதன்படி ஸ்திரத்தன்மையோடு இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.